பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 11 2024 **TUESDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, ஜி 20 உச்சி மாநாட்டுக்கு இடையே, பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்புப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

2. கடல் சார் பொருளாதாரத்தை மேம்படுத்த கடந்த பத்து ஆண்டுகளில் முக்கிய கொள்கை சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

3. நாட்டின் ஜவுளி ஏற்றமதியை 2030-ம் ஆண்டுக்குள் 150 பில்லியன் டாலர் அளவுக்கு உயர்த்த இலக்கு நிர்ணயித்து மத்திய அரசு செயல்பட்டு வருவதாக ஜவுளித் துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

4. மகாராஷ்டிரா சட்டப் பேரவைத் தேர்தல் மற்றும் ஜார்க்கண்ட் இரண்டாம் கட்ட சட்டப் பேரவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது

5. சீன மாஸ்டர்ஸ் பேடமிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, பிரேசிலில் நடைபெற்ற ஜி 20 உச்சி மாநாட்டுக்கு இடையே, பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்புப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தோனேஷியா அதிபர் திரு **Prabowo Subianto**–வுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட பிரதமர், இருநாடுகளுக்கும் இடையே வர்த்தகம், பாதுகாப்பு, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

போர்ச்சுக்கல் பிரதமர் திரு **Luis Montegro**-வுடன் பேச்சு நடத்திய பிரதமர், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, பசுமை ஹைட்ரஜன் உள்ளிட்டவற்றில் இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தினார்.

வர்த்தகம், தொழில்நுட்பம், கலாச்சாரம், உள்ளிட்ட துறைகளில் இத்தாலி உடனான ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து அந்நாட்டு பிரதமர் திருமதி ஜார்ஜியா மெலோனியுடன், திரு நரேந்திர மோடி பேச்சு நடத்தினார்.

நார்வே பிரதமர் திரு **Jonas Gahar**–வுடன் பேச்சு நடத்திய பிரதமர், ஆர்டிக் கொள்கை தொடர்பாக அவருடன் ஆலோசனை நடத்தியதாகவும்,

இது இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்றும் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மெக்ரானுடன், விண்வெளி, எரிசக்தி, உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அவர் பேச்சு நடத்தினார்.

இங்கிலாந்து பிரதமர் திரு **Keir Starmer** –வுடனும், திரு நரேந்திர மோடி இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

திரு **Keir Starmer** –வுடன் தமது சந்திப்பு ஆக்கப்பூர்வமாக அமைந்தது என்றும், தொழில்நுட்பம், புதுமை கண்டுபிடிப்புகள், பசுமை எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் இருநாடுகளுக்கும் இடையேயான கூட்டு செயல்பாடுகளை மேலும் அதிகரிப்பது தொடர்பாக அவருடன் பேச்சு நடத்தியதாகவும் திரு நரேந்திர மோடி சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

**<<<<<<<>>>>>>**

கடல் சார் பொருளாதாரத்தை மேம்படுத்த கடந்த பத்து ஆண்டுகளில் முக்கிய கொள்கை சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய

துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற தெற்காசிய கடல்சார் உச்சிமாநாட்டில் பேசிய அவர், வளர்ச்சியடைந்த பாரதத்தை கட்டமைப்பதில் கடல்சார் பொருளாதாரம் முக்கிய பங்கு வகிக்கும் என்று தெரிவித்தார்.

துறைமுகங்கள் மற்றும் நீர்வழித்தடங்களை மேம்படுத்த 80 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்திய துறைமுகங்களில் சரக்கு கையாளும் திறனை மேலும் பல மடங்கு அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்தியா 7 ஆயிரத்து 500 கிலோமீட்டர் கடற்கரை பகுதியை கொண்டுள்ளதாகவும், பொருளாதார மேம்பாட்டில் இது முக்கிய பங்கு வகிக்கும் என்றும் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

நாட்டின் ஜவுளி ஏற்றுமதியை 2030-ம் ஆண்டுக்குள் 150 பில்லியன் டாலர் அளவுக்கு உயர்த்த இலக்கு நிர்ணயித்து மத்திய அரசு செயல்பட்டு வருவதாக ஜவுளித் துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

ஹரியானாவின் பானிபட்டில் நடைபெற்ற ஜவுளி உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் உடனான கலந்துரையாடல் கூட்டத்தில் நேற்று அவர் பங்கேற்று உரையாற்றினார்.

2030-ஆம் ஆண்டுக்குள் நாட்டின் ஜவுளி உற்பத்தி சந்தையை 350 பில்லியன் டாலர் அளவுக்கு உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஜவுளி தொழில்துறையில் பசுமை எரிசக்தி பயன்பாட்டை ஊக்குவிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஜவுளி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி இலக்குகளை விரைந்து எட்டும் நோக்கில், இத்துறை சார்ந்த நிறுவனங்கள் செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

உள்கட்டமைப்பு வளர்ச்சி, ஏற்றுமதி கொள்கைகள், பல்வேறு நாடுகள் உடனான தடையற்ற ஒப்பந்தங்கள் போன்றவை ஜவுளி ஏற்றுமதியை மேலும் அதிகரிக்கும் என்று திரு கிரிராஜ் சிங் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

மகாராஷ்டிரா சட்டப் பேரவைத் தேர்தல் மற்றும் ஜார்க்கண்ட் இரண்டாம் கட்ட சட்டப் பேரவைத் தேர்தல் நாளை நடைபெறவுள்ள நிலையில்,

அதற்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மகாராஷ்ட்ராவில் மொத்தம் உள்ள 288 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இதில் 4 ஆயிரத்து 136 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

மாநிலத்தில் 9 கோடியே 70 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாகவும், மாநிலம் முழுவதும் ஒரு லட்சத்து 427 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் மகாராஷ்ட்ரா தலைமை தேர்தல் அதிகாரி திரு சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

தொள்ளாயிரத்து 90 வாக்குச்சாவடிகள் அதிக பதற்றம் உள்ளவையாக கண்டறியப்பட்டுள்ளதாகவும், அவற்றில் கூடுதல் பாதுகாப்புப்படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தேர்தலுக்காக ஒரு லட்சத்து 64 ஆயிரம் வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளது என்றும், அவை சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்கு இன்றைய தினத்திற்குள் முழுமையாக அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜார்கண்டில் 12 மாவட்டங்களுக்கு உட்பட்ட 38 சட்டப்பேரவைத் தொகுதிகளில் இரண்டாம் கட்டமாக நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இதில், ஒரு கோடியே 23 லட்சம் பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாகவும், 55 பெண்கள் உட்பட 528 வேட்பாளர்கள் களத்தில் உளளதாகவும் அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு ரவிகுமார் தெரிவித்துள்ளார்.

மாநிலம் முழுவதும் 14 ஆயிரத்து 218 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பதற்றமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>

வித்யா லஷ்மி தளத்தின் மூலம் மாணவர்கள் உயர்கல்விக்கு எளிதில் கடன் பெற முடியும் என்று தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு அருணாச்சலம் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - ராஜசேகரன் - 46 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>

தமிழகத்தின் முதுமலை புலிகள் காப்பக பகுதிகளில் தாவர உண்ணி மற்றும் ஊன் உண்ணிகள் கணக்கெடுப்பு இன்று தொடங்க உள்ளது.

தேசிய புலிகள் ஆணையத்தின் வழிகாட்டுதல்படி இக்கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - நீலகிரி சரவணன் - 50 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>

உலக கழிவறை தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

கழிவறை மற்றும் தூய்மையின் அவசியம் குறித்து உலக அளவில் விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கில், 2013-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 19-ஆம் தேதி உலக கழிவறை தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், மத்திய வீட்டுவசதித்துறை அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கையில், இந்தியாவில், தூய்மை இந்தியா இயக்கத்தின்மூலம், 11 கோடியே 73 மூன்று லட்சம் வீடுகளில் கழிவறைகள் கட்டப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

5 லட்சத்து 57 ஆயிரம் கிராமங்கள் திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லாத பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளன என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

<u>*விளையாட்டுச் செய்திகள்*</u>

சீன மாஸ்டர்ஸ் பேடமிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

இதில், இந்தியாவின் பிரியன்ஷு ரஜாவத், பி வி சிந்து, ஆகர்ஷி காஷ்யப், சுமித் ரெட்டி, சிக்கி ரெட்டி உள்ளிட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

<<<<<<<END>>>>>